

சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழகச் செயலாளர்கள் வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று சென்னை ஓட்டேரி ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம். கே.டி.மஹாலில் அவை தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ்.ரவிச்சந்திரன் பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, எம்.விஜயகுமார், கே.எஸ். எம்.நாதன், சி.மகேஷ் குமார், ஜி.எம்.தேவன், இஸட் ஆசாத், பி.டி.சி.செல்வராஜ், பி.எம்.யாழினி மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான பணிகளை பார்வையிட்டு நேற்று (12.08.2024) ஆய்வு செய்தனர். உடன் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தவத்திரு பேரூர் ஆதீனம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபரசுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் அ.பிரதீப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந. திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, தலைமை பொறியாளர் பொ. பெரியசாமி, கண்காணிப்பு பொறியாளர் (தலைமையிடம்) ச. செல்வராஜ், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கலைஞர் நூற்றாண்டு - நாணயம் வெளியீட்டு விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஆக.13

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (12.08.2024 திங்கள்கிழமை), சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றி னார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம்கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், கே எஸ் ரவிச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, எம். விஜயகுமார், கே.எஸ்.எம். நாதன் மற்றும் கவிஞர் நன்மாறன், பரிதி இளம்சுருதி, எம்.பி.எம்.ஷேக்அப்துல்லா,

மாவட்ட நிர்வாகிகள்: ஜி.மகாதேவன், இசட். ஆசாத் பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ. நாகராசன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.டி.சி.செல்வராஜ், பி.எம். யாழினி, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி. ஜே.துளசிங்கம், பி.உதய சங்கர், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன், எஸ். தனசேகர், க.வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில்விஜய், நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், து. ஆயிரம், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப் குமார், ஆர்.எஸ்.சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்டகழகச்செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

ஒட்டு மொத்த தமிழினத்தின் பாதுகாவலராக, நவீன தமிழ்நாட்டை தட்டித் தட்டி செதுக்கிய சிற்பியாக, தமிழை திறம்பட கையாண்ட படைப்பாளராக, செம்மொழி தகுதியைப் பெற்றுத் தந்த தமிழினப் போராளியாக, 80 ஆண்டுகாலப் பொது வாழ்வின் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு பொழுதையும் தமிழ் தமிழர் தமிழ்நாடு மேன்மைக்காக அர்ப்பணித்து அயராது உழைத்த ஓய்வறியாத சூரியனாம் நம் உயிர் நிகர்த் தலைவர் தொலைநோக்கு பார்வையுடன் உருவாக்கிய திட்டங்களும், நிலை நிறுத்திய திராவிட கொள்கைகளும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்திய ஒன்றியம் முழுமைக்கும் வழிகாட்டும் மனிதநேய தத்துவமாகத் திகழும் நம் பெருமைமிகுத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாவது நினைவு நாளில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேரணியில் கலந்து கொண்டு முத்தமிழறிஞருக்கு வீர வணக்கம் செலுத்திய சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

அருந்ததியின மக்கள் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதால் அவர்தம் முன்னேற்றத்திற்கு சிறப்புச் சலுகைகள் அவசியமெனக் கருதி ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 18% இட ஒதுக்கீட்டில் 3% அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடாக வழங்க வேண்டும் என 29.4.2009 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அறிவுரைப்படி அப்பொழுது உள்ளாட்சித் துறை அமைச்சராகத் திகழ்ந்த இன்றைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் மசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்றிய திட்டத்தால் அருந்ததியின மக்கள் அடைந்த பலன்களை கண்டு மனம் பொறுக்காத வீணர்கள் இச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு போட்டதை எதிர்த்து நம் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னெடுத்த பல்வேறு சட்டப்போராட்டங்களுக்குப் பிறகு இப்பொழுது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு இந்த உள் ஒதுக்கீடு செல்லும் என அறிவித்ததை இக்கூட்டம் மனம் மகிழ வரவேற்று வரலாற்று சிறப்பு வாய்ந்த தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றநீதிபதிகளுக்கு இக்கூட்டம் நன்றியையும் இத்திட்டம் செவ்வண நிறைவேற காரணமாக இருந்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டியும், வணங்கியும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

### யானை கவுனி மேம்பாலம்!

சென்னை கிழக்கு மாவட்டம், வால்டாக்ஸ் சாலை மற்றும் ராஜா முத்தையா சாலை இணைக்கும் நயினார் மேம்பாலம் என்கின்ற யானைக்கவுணி மேம்பாலம் கடந்த ஆட்சியாளர்களால் கிடப்பில் போடப்பட்டிருந்த நிலையில் 2016-ஆம் ஆண்டு நம் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்த அமைச்சர் சேகர்பாபு அவர்களும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தயாநிதிமாறன் அவர்களும் தொடர்ந்து இரு அவைகளிலும் குரல் எழுப்பியும், அப்பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்தும் குறிப்பாக கொரோனா தொற்று காலத்தில் 5 க்கும் மேற்பட்ட முறை இப்பணிகளை மேற்பார்வையிட்டும் தொடர்ந்து தென்னக ரெயில்வே மேலாளரை சந்தித்து முறையிட்டனர்.

2021-ல் கழக ஆட்சி அமைந்தவுடன் ஒன்றிய அரசுக்கு கொடுத்த தொடர் அழுத்தத்தின் விளைவாக மார்ச் 15 அன்று இப்பாலம் ஒரு வழிப்பாதையாக திறந்தும், அதனைத்தொடர்ந்து நேற்று (12.08.2024) அப்பாலத்தின் இரு வழிப்பாதைகளும் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ்நாட்டின் 80 ஆண்டுகால அரசியல் வரலாற்று பெட்டகமாகவும், அரசியல் நுண்ணுணர்வை பாமரருக்கும் கடத்தும் பரப்புரை ஆயுதமாகவும், தன்னை காலத்துக்கேற்றவாறு தகவமைத்துக் கொண்டு புதுப் பொலிவுடன் புதிய பக்கங்களுடன் 83 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளை முரசொலியைப் படிப்போம், அதிக அளவில் பகிர்வோம், பரப்புவோம் என உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது

### கலைஞர் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீடு!

தமிழ்-தமிழர்- தமிழ்நாடு மேன்மைப்படுத்த தன் வாழ்நாள் முழுவதும் உழைத்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவருடைய நூற்றாண்டு நிறைவையொட்டி அவரது உருவம் பொறிக்கப்பட்ட நூறு ரூபாய் நாணயத்தை 18.08.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை கலைவாணர் அரங்கத்தில் கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் தராஜ்நாத் சிங் வெளியிடும் விழாவில் பெருந்திரளாக கலந்து கொள்ள முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

### ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன் முன்னிலையில் - காஞ்சிபுரம் மாவட்டம்

# உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளி மாணவ - மாணவியர் 903 பேருக்கு மிதிவண்டிகள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார் - கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், ஆக. 13 -

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் பல்வேறு பள்ளிகளில் பயிலும் 903 பள்ளி மாணவர்கள் அரசின் விலையில்லா மிதிவண்டிகளை நேற்று மாவட்டச் செயலாளரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் வழங்கினார். இதில் ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளிகளில் நேற்று (12.8.2024) காலை திங்கள்கிழமை 12.08.24 11.00 மணி முதல் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு பள்ளி 903 பள்ளி மாணவர்கள் - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி, அரசின் திட்டங்களை எடுத்துரைத்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. ஹேமலதா ஞானசேகரன் முன்னிலை வகித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூராட்சி தலைவர் பொ. சசிகுமார் மாவட்ட குழு உறுப்பினர் பத்மா பாபு, திருப்புலிவனம் ஒன்றிய கவுன்சிலர் வீரம்மாள் மாயகிருஷ்ணன் ஊராட்சி மன்ற தலைவர் பிரதாப், கம்மாளம்பூண்டி ஒன்றிய கவுன்சிலர் பானுமதி சேகர், மானாம்பதி ஒன்றிய கவுன்சிலர் சுகுணா சுந்தர்ராஜன்,

ஊராட்சி மன்ற தலைவர் ராதா நடேசன், பெருநகர் ஒன்றிய கவுன்சிலர் ருத்திரக்கோட்டி (எ) தயாளன் , ஊராட்சி மன்ற தலைவர் மங்களகௌரி வடிவேல், களியாம்பூண்டி ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை ஊராட்சி மன்ற தலைவர் வளர்மதி சுதாகர், அவைத் தலைவர் சுப்புராயன், மாவட்ட பிரதிநிதிகள் கார்த்திகேயன், கோவிந்தராஜ், இளைஞர் அணி யுவராஜ், துணை அமைப்பாளர்கள் கோபிநாதன், ஆதி, பரணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழக அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சியில் உள்ள அரசு மேல்நிலை பள்ளிகளில் மாவட்ட கழக செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் கலந்து கொண்டு 903 பள்ளி மாணவர் – மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். இதில் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன் முன்னிலை வகித்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், பேரூராட்சி தலைவர் பொ.சசிகுமார், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பத்மா பாபு, வீரம்மாள் மாயகிருஷ்ணன், பிரதாப், பானுமதி சேகர், சுகுணா சுந்தர்ராஜன், ராதா நடேசன், ருத்திரக்கோட்டி (எ) தயாளன், மங்களகௌரி வடிவேல், அண்ணாதுரை, வளர்மதி சுதாகர், மற்றும் சுப்புராயன், கார்த்திகேயன், கோவிந்தராஜ், யுவராஜ், கோபிநாதன், ஆதி, பரணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எஸ்.பி. சற்குணபாண்டியன்

## ஆகஸ்ட் 13 (2016)



'மாணவி சற்குணம்' என்ற பெயரில் கழக மேடைகளில் பேசி வந்த சற்குணபாண்டியன் சிறுமியாக இருந்தபோதே, கழகக் கொள்கைகளை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டவர். இவரது தந்தை பழம் பெரும் சுயமரியாதைக்காரரான பொன்னுசாமி அவர்களால் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டப்பட்டு, திராவிட இயக்கத்தின் தீபமாய், மாதர்குல திலகமாய் விளங்கியவர்.

"சொல்லின் செல்வி" என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட இவர், மாணவரணி, மகளிர் அணி, வடசென்னை மாணவரணி, சென்னை மாவட்ட மகளிர் அணி, மாநில மகளிர் அணியின் செயலாளர் என்று படிப்படியாகப் பொறுப்பேற்று, கழக துணைப் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்தார்.

1971இல் சென்னை மாநகராட்சிக்கு நியமன உறுப்பினராகவும் – 1989, 1996 ஆகிய இரண்டு முறை சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 1996ல் தலைவர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார்.

மதுரை, திருச்சி, சென்னை ஆகிய இடங்களில் மண்டல மகளிர் மாநாடு நடத்தி ஒன்றிய, நகர மகளிர் அமைப்புகளை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.

17.9.1988 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய முன்னணி ஊர்வல அணிவகுப்பில் பல்லாயிரக்கணக்கான மகளிரைப் பங்கேற்கச் செய்து ஊர்வலத்திற்கு சிறப்பு சேர்த்ததன் காரணமாக சென்னை கடற்கரையில் நடைபெற்ற தேசிய முன்னணித் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் திருக்கரத்தால் தங்கச் சங்கிலி பரிசு பெற்றவர்.

திருச்செந்தூர் நீதிகேட்டு நெடும்பயணத்தில் தலைவர் கலைஞருடன் பயணம் மேற்கொண்டவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் மகளிர் படை திரட்டி அதற்குத் தலைமை தாங்கி சிறை சென்றவர்.

இளம் பிராயத்திலிருந்து இவருக்கு இயக்கத்திலிருந்த ஆர்வத்தையும், தியாகத்தையும், பேச்சாற்றலையும் பாராட்டும் வகையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் (1990) தலைமைக் கழகத்தின் சார்பில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**